11.03.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 143 /2019 ) திரு.சுப்பாராஜ்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>–

1) நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் கே.சிதம்பராபுரம் கிராமத்தில். எத்தனை வருடங்களாக அங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் பிறந்தது முதல் அங்கு தான் குடியிருந்து வருகிறேன். வாதிகளுக்கும் சொந்த ஊர் கே.சிதம்பராபுரம் தான் என்றால் சரிதான். வாதியின் அப்பா பெயர் அய்யலுசாமி என்றால் சரிதான். அய்யலுசாமி உடன் பிறந்தவர்கள் வீரப்பநாயக்கர், சுப்பையா நாயக்கர், நாராயணசாமி நாயக்கர், கந்தசாமி நாயக்கர் என்றால் சரிதான். அய்யலுசாமி நாயக்கரின் அப்பா பெயர் சங்கரப்ப நாயக்கர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிராது 1வது தபசில் சொத்துக்கள் மற்ற சொத்துக்கள் எல்லாம் ஆதியில் சங்கரப்ப நாயக்கருக்குப் பாத்தியப்பட்டியிருந்தது என்றால அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.302/1ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 32 செண்டு என்றால் சரிதான். சங்கரப்ப நாயக்கர் 1948ல் விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சங்கரப்ப நாயக்கர் 1948ல் அவரது மக்களுக்கு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்று பிராதில் சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு எதற்காக போட்டுள்ளார்கள் என்ன விவரம் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சங்கரப்ப நாயக்கருக்கு 2 மனைவிகள் என்று தெரியுமா என்றால் அதுவும் தெரியாது. எனது முதல்விசாரணை நிருபண வாக்குமூலத்தில் பாரா 4ல் என்ன சொல்லியுள்ளேன் என்று நிருபண வாக்குமூலத்தை காண்பித்து வாசித்து கேட்ட போது சங்கரப்ப நாயக்கருக்கு 2 மனைவிகள் என்றுசொல்லியுள்ளேன். நான் எந்த வருடம்பிறந்தேன் என்றால் 18.12.1973ல் பிறந்தேன். அதனால் சங்கரப்ப நாயக்கரின் சொத்துக்களை பொறுத்து அவரது ஆண் வாரிசுகள் 16.04.1959ல் வாய்மொழியாக பாகம் செய்துகொண்ட விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். சர்வே எண்.302/1ல் ஏக்கர் 1 செண்டு 32ல் வடபுறம் 33 செண்டு கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

2) தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.4 நான் பெற்ற கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தில் நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு தென்பக்கம் வாதியின் கையிருப்பு நிலம் உள்ளது என்றால் ஸ்தலத்தில்

வாதியின் கையிருப்பு நிலம் இல்லை. நான் கியைம் பெற்ற நிலத்திற்கு தென்பக்கம் யாருடைய நிலம் உள்ளது என்றால் அய்யப்ப நாயக்கருக்கு உள்ளது. அய்யப்ப நாயக்கருக்கு நிலம் தென்பக்கம் உள்ளதை காண்பிக்கக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தின் நான்கு மால்கள் விவரம் எனக்கு கிரையம் கொடுத்தவர்களுக்குத்தான் தெரியுமா என்றால எனக்கும் தெரியும். சர்வே எண்.302/1 சொத்தை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து சொத்தில் என்ன என்ன உள்ளது என்று பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.302/1ல் கிணறு கிடையாது என்றால் சடிரிதான். எனது கிரைய ஆவணம் வா.சா.ஆ.4ல் கிணறு, மோட்டார் பம்புசெட் காண்பிக்கப்பட்டுள்ளது தவறு என்றால் எனக்கு கிரையம் கொடுத்தவருக்குத்தான் தெரியும். சர்வே எண்.302/1ல் தென்பக்கம் 66 செண்டை நாராயணசாமி நாயக்கர் மகன் சீனிவாசன் அனுபவம் செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சங்கரப்ப நாயக்கரின் மக்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் 1 ஏக்கர்ப 32 செண்டில் வடபக்கம்66 செண்டு, அய்யலுசாமி நாயக்கருக்கும், தென்பக்கம் 66 செண்டு நாராயணசாமி நாயக்கருக்கும் ஒதுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கு சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் அச்சம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன். எனது எதிர்வழக்குரையில் நான் கிரையம் பெற்ற சொத்து எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்த அச்சம்மாளுக்கு அந்த கிரையச்சொத்து எவ்வாறு பாத்தியம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கிரையம பெற்ற சொத்து அச்சம்மாளுக்குப் பாத்தியப்பட்டது கிடையாது என்றும் அதை கிரையம் கொடுப்பதற்கு அச்சம்மாளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற வா.சா.ஆ.4 ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 3 முதல் 7 பிரதிவாதிகளை பொறுத்து அவர்களின் பெயர் பட்டாவில் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,

11.03.2026.